மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழித் திங்கள் 01 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 390/2021-ல்**

**அசல் வழக்கு எண். 77/2019**

உஷா(எ) கோமதி ...வாதி

**// எதிர்//**

1. நாகநாதன்
2.தங்கசாமி
3.அன்புதாசன்
4.இளங்கோவன்
5.சீனிவாசன்
6.பழனிவேல்
7.ராஜம்மாள்
8.அம்மாக்கண்ணு
9.ஆறுமுகம்(இறந்தார்)
10.சரோஜா
11.சிவபாலன்
12. ராஜகோபால்
13. ரமேஷ்(இறந்தார்)
14.சக்திவேல்
15.தினேஷ்
16.ஜெயராமன் ....பிரதிவாதிகள்
17.நடேசன்
18.மஞ்சுளா
19.சிவா
20.சந்திரன் .... மனுதாரர்/LRS of the deceased 9

and 13th Defendants

இம்மனு 15.11.2021 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (24.11.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. பொன்னுலிங்கம்** அவர்களும், 1 முதல் 16,18,19 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. S. உதயகுமார் மற்றும் திரு. A. அபினேஷ் ஆகியோர்கள்** முன்னிலையாகியும், 17,20 எதிர்மனுதார்கள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று(16.12.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் இறந்த 9 பிரதிவாதிகளின் சட்டப்படியான வாரிசுகளான மனுவில் கண்டுள்ள 17 முதல் 20 நபர்களை வாரிசுகளாக ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை மேல் நடத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்கக்கோரி உ.ந.ச. கட்டளை 22 விதி 4-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. பிரதிவாதிகள் பேரில் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தோன்றதலுக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், 9 மற்றும் 13 பிரதிவாதிகள் இறந்த கடந்த 30.10.2019 ம் தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் 9 ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசான அவரது மகன் நடேசன் மற்றும் 13 ம் பிரதிவாதியின் சட்ட்பபடியான வாரிசான அவரது மனைவி மஞ்சுளா மற்றும் மகன்கள் சிவா, சந்திரன் ஆகிய நபர்களை அசல் வழக்கில் தரப்பினரகளாக சேர்த்துக்கொள்ளவேண்டி இம்மனு

வானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பொதுவான எதிருரையின் சுருக்கம்:-(2 முதல் 16 வரையிலான எதிர்மனுதாரர்கள் தனதாக ஏற்றுக்கொள்கிறார்கள்)</u>**

9 மற்றும் 13ம் பிரதிவாதிகள் அசல் வழக்கு முன்பே காலமாகிவிட்டார்கள் என்றும், அவர்கள் இறந்து ஒன்றரை ஆண்டுகள் கழித்து காலதாமதத்தை மன்னிக்க கூடிய அபேட்மெண்டை ரத்து செய்ய மனுக்கொடுக்கப்பட்டுள்ளது என்றும் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 5. | **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.** |

இம்மனுவில் இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

பிரதான வழக்கு கோப்பானது கடந்த 10.06.2019ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்ட நிலையில், மனுதாரர் தரப்பில் 9 மற்றும் 13வது பிரதிவாதிகள் ஆறுமுகம் மற்றும் ரமேஷ்ஆகியோர்கள் இறந்தவிட்டதாகவும் மேற்படி நபர்களின் வாரிசுகளாக 17 முதல் 20 வரையான நபர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்த வழக்கினை மேல் நடத்த உத்தரவிடவேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம்

கருத்திற்கொள்கிறது.

மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று மேற்படி ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் காரணம் சொல்லவேண்டுமென்ற பொதுவிதிக்கு உட்பட்டு மேற்படி மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தாவா சொத்தைப்பொறுத்து மேற்படி வாரிசுதாரர்களுக்கு எதுவும் தெரியாது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டுள்ளதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

எந்தஒரு வழக்கிலும், தரப்பினர்களின் முழுமையான சாட்சிய சான்றாவணங்களை பதிவு செய்த பின்பே மேற்படி வழக்கில் ஒரு இறுதியான மற்றும் முழுமையான தீர்வு எட்டப்படும் என்பதை கருத்திற்கொண்டும், மேற்படி நபர்களின் வாரிசுகளாக 17 முதல் 20 வரையான நபர்களை வழக்கில் பிரதிவாதிகளாக தரப்பினர்களாக சேர்த்து நடத்துவதால் வழக்கின் தன்மை மாறிவிடாது என்பதும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது இறந்துபோன 9 வது மற்றும் 13 வது பிரதிவாதிகளின் வாரிசுகளாக 17 முதல் 20 வரையான நபர்களை வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்றும் இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (16.12.2022) அவையறியப்பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)